19

# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை– 600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை– 600 032.
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

அசல் மனு எண்: 0622/2016/ந

ஆணை எண்: 0161/2016

நாள்: 05/10/2016

திரு. கு. வேலுச்சாமி,
மேல்வீதி,
காந்தி நகர்,
புஞ்சை புளியம்பட்டி. – மனுதாரர்

நகராட்சி ஆணையர்
புஞ்சை புளியம்பட்டி நகராட்சி,
ஈரோடு மாவட்டம். – எதிர்மனுதாரர்

## ஆணை

மனுதாரர் புஞ்சை புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்: 10ல் சர்வே எண்:134ல் கட்டப்பட்டு வரும் ஆண்கள் கழிப்பிட கட்டுமானம் தரமானதாக இல்லையென முறையீடு செய்து தாக்கல் செய்த 20.06.16 நாளிட்ட முறையீட்டு மனு 27.06.16 அன்று பெறப்பட்டு எண்: 0622/16 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி மனு தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள், பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் அறிக்கைகள்/ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு இம் முறைமன்ற நடுவத்தால் ஆணையிடப்படுகிறது.

மனுதாரரது முறையீட்டில் புஞ்சை புளியம்பட்டி நகராட்சி வார்டு எண்:10ல் பட்டத்தரசி அம்மன் கோவில் அருகில் சர்வே எண்:134ல் சுவச் பாரத் மிசன் திட்டத்தின்கீழ் நகராட்சியால் கட்டப்பட்டு வரும் ஆண்கள் கழிப்பிட கட்டுமானம் முறையாகவும் தரமாகவும் கட்டபடவில்லை என்றும் நகராட்சி அலுவலர் எவரும் மேற்பார்வை செய்யவில்லை என்றும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வே எண்: 134ல் உள்ள மழை நீரோடை வழியாக மழைக் காலங்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடுமெனவும், தரக்குறைவான சிமெண்ட் கலவையால் கட்டப்பட்ட கட்டிடம் மழைநீரில் அரிக்கப்பட்டு பழுதடைந்து விடுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மழைக்காலங்களில் மழைநீர் சூழ்ந்து கொள்வதால் கழிப்பிடத்தை இயலாமல் பொது மக்கள் சிரமத்திற்கு ஆளாக நேரிடுமென நகராட்சி ஆணையருக்கு 12. மின்னஞ்சல் மூலம் புகார் அளித்ததாகவும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். பலவீனமாக கட்டப்பட்டுள்ள மேற்படி கழிப்பிட கட்டுமானத்திற்கு இடம் தேர்வு செய்தது, கட்டுமானம் தரமற்ற முறையில் உள்ளதற்கு ஒப்பந்ததாரர் மற்றும் நகராட்சி ஆணையர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

இம்முறையீடு குறித்து இம்முறை மன்ற நடுவ 28.06.2016 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் பு.புளியம்பட்டி நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டது. நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்:655/16/இ/நாள்:12.07.2016 பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் மேற்படி கட்டிட கட்டுமானத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட அளவு மற்றும் தரத்திலான சிமெண்ட், மணல் கலவை, ஜல்லி உரிய விகிதாசாரத்தில் பயன்படுத்தப்பட்டமை குறித்தும் பொதுப் பணித்துறை நிர்ணயித்துள்ள அளவீடுகள் மற்றும் வழிமுறைகளின்படி கட்டுமானப் பணி நடைபெற்றுள்ளது குறித்தும் சான்றளித்து உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும், கழிப்பிடம் சாலையின் அருகில் அமைக்கப்பட்டுள்ளதெனவும், ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பெண்களுக்கான கழிப்பிடம் பத்தாண்டுகளுக்கும் மேலாக பயன்பாட்டில் உள்ளதெனவும் மழைவெள்ள நீர் பாதிப்பு ஏதுமில்லையெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தரம் மற்றும் அளவீட்டில் எவ்விதமான குறைபாடுகளும் மேற்படி பணியில் இல்லையெனவும் சான்றளிக்கப்பட்டுள்ளது. மேற்படி கட்டிடத்தின் புகைப்படம், மதிப்பீடு நகல், விரிவான மதிப்பீடு நகல் ஆகிய ஆவணங்களும் முறை மன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், உரிய விசாரணைகள் மேற்கொள்ளும் பொருட்டு மனுதாரர் மற்றும் நகராட்சி ஆணையர் ஆகியோர் முறையே 19.08.16 மற்றும் 22.08.16அன்று விசாரணைக்கு ஆஜராகிடுமாறு தெரிவித்து இம் முறை மன்ற நடுவ 28.07.16 நாளிட்ட அறிவிப்பாணைகள் அனுப்பப்பட்டன. அதன்படி 19.08.16 அன்று மனுதாரரும் அவரது தரப்பிலான சாட்சி திரு.சிவராஜ் என்பவரும் ஆஜராகி வாக்குமூலங்கள் அளித்தனர். அதில் ஏற்கெனவே மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்ட முறையீட்டையே பதிவு செய்தனர். மேலும், மேற்படி ஆண்கள் கழிப்பிட கட்டுமானப் பணி 80 சதவீதம் முடிவுற்றதாகவும் குறிப்பிட்டனர். நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய புகார் மனுவிற்கு பதில் ஏதும் வரப்பெறவில்லை என மனுதாரரும், சாட்சியும் தெரிவித்தனர். மேலும் மனுதாரர் தரப்பிலான சாட்சி திரு.சிவராஜ் என்பவர் தனது வாக்குமூலத்தில், தான் முதலில் பொது மக்கள் பயன்படுத்தும் வகையில் திருவிழாவிற்கு இடையூறு ஏற்படாதவாறு வேறு இடத்தில் கட்ட வேண்டுமென கூறியிருந்ததாகவும் கட்டுமானப் பணி குறித்து நகராட்சி ஆணையருக்கு புகார் அளித்து பதில் வரப்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். புகார் மனுக்கள் அனுப்பப்பட்டமைக்கான ஒப்புகைச் சீட்டு ஆதாரம் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

22.08.16 அன்று புஞ்சை புளியம்பட்டி நகராட்சி ஆணையர் விசாரணைக்கு ஆஜராகி தனது வாக்குமூலத்தினை தாக்கல் செய்தார்.

மனுதாரரது 20.6.16 நாளிட்ட ஒரு முறையீட்டு மனு மட்டும் கிடைக்கப்பெற்று தன்னால் 12.7.16ல் முறை மன்ற நடுவத்திற்கு பதில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதென நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி ஆணையர் மேற்படி கட்டுமானப் பணிக்கான மதிப்பீடு நகர்மன்ற அனுமதி, ஒப்பந்தப் புள்ளிகள் போன்ற விவரங்களை தனது வாக்குமூலத்தில் அளித்துள்ளார். இவ்வொப்பந்தப் பணி டிசம்பர் 2015ல் துவக்கப்பட்டு முடிவுற்றதெனவும் நகராட்சி பொறியாளரால் தொடர்ந்து பணிகள் ஆய்வு செய்யப்பட்டதெனவும் குறிப்பிட்டுள்ளார். பணிகள் முறையாக ஒப்பந்தப் புள்ளிகளில் குறிப்பிட்டுள்ளவாறும் தரமான வகையிலும் மேற்கொள்ளப்பட்டன. எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணி மத்திய அரசின் "தூய்மை இந்தியா திட்டத்தின்" படி செயல்படுத்தப்பட்டதெனவும் 40 சதவீதம் மத்திய அரசின் நிதியும் 35 சதவீதம் மாநில அரசு நிதியும் 25 சதவீதம் நகராட்சி நிதி பங்களிப்பாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளதெனவும் இதற்கென நகராட்சி நிர்வாக ஆணையாளரால் ஆய்வு மேற்கொள்வதற்கென தனி அலுவலரும் நியமிக்கப்பட்டாரெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி தனி அலுவலர் திட்ட செயலாக்க அலகில் நியமிக்கப்பட்டு பணிகள் நடைபெறும்போது மூன்று முறை ஆய்வு மேற்கொண்டுள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டல அளவில் சிறப்பாக கட்டி முடிக்கப்பட்ட ஒரு கட்டிடம் என திட்ட செயலாக்க அலகால் பாராட்டும் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள சர்வே எண் 134 தான் நீர்வழி புறம்போக்கு இடமாகும் தற்போது கட்டப்பட்டுள்ள ஆண்கள் கழிப்பறை சர்வே எண் 135ல் கட்டப்பட்டுள்ளதெனவும் மனுதாரர் தவறான தகவலை குறிப்பிட்டுள்ளாரென்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இது குறித்து வருவாய் பதிவேடுகளின் எடுபிரதி மற்றும் தொடர்புடைய ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டன. மனுதாரர் மட்டுமே ஒருமுறை அலுவலகம் வந்து அந்த இடத்தில் ஒரு கட்டி முடிக்கப்படாத கோவில் உள்ளதென்றும் இங்கு கழிப்பறை கட்டக் கூடாது எனவும் கூறினார் எனவும் அந்தக் கோயில் இன்னமும் கட்டி முடிக்கப்படவில்லையெனவும் நகராட்சி ஆணையரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காந்தி நகர் மக்கள் பயன்படுத்துதற்கு உரிய இடமென்பதாலும் ஏற்கெனவே அந்த பகுதியில் பெண்கள் கழிப்பறை உள்ளதாலும் அந்த இடம் தேர்வு செய்யப்பட்டதாகவும் மனுதாரரைத் தவிர பொது மக்கள் அனைவரும் கேட்டுக் கொண்டதாலும் அந்த இடத்தில் ஆண்கள் கழிப்பிடம் கட்டப்பட்டுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் அல்லது அவரது தரப்பிலான சாட்சியிடமிருந்தோ எவ்வித மனுவும் வரப்பெறவில்லை எனவும் மாவட்ட ஆட்சி தலைவர் அல்லது மற்ற உயர் அலுவலர்களிடமிருந்து விவரம் எதுவும் இது குறித்து கோரப்படவில்லையெனத் தெரிவித்து மேற்படி கட்டிடம் தரமுள்ளதாக கட்டி முடிக்கப்பட்டு பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளதாக தெரிவித்து உறுதி செய்து கட்டுமான பணித்தொடர்பான ஆவண நகல்கள் மற்றும் விவரங்களை முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு நகராட்சி ஆணையரால் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும் தொழில்நுட்ப அலுவலரான நகராட்சிப் பொறியாளரும் நேரில் ஆஜராகி நகராட்சி ஆணையரது வாக்குமூலத்தை உறுதி செய்து அதனையே தனது வாக்குமூலமாகவும் ஏற்றுக்கொள்ளும்படி சமர்ப்பித்தார்.

எனவே, எதிர்மனுதாரரான நகராட்சி ஆணையர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆதாரங்கள், அறிக்கைகள், ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்களின் அடிப்படையில் மனுதாரரது முறையீடு ஆதாரமற்றதெனவும் ஏற்புக்கு உகந்ததல்ல எனவும் தீர்மானிக்கப்பட்டு அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2016–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 5–ம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது,

.–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

4/11/2016

செயலாளர்.

26.10.16
26/10/16

பெறுநர்:

1. திரு. கு. வேலுச்சாமி,
   மேல்வீதி, காந்தி நகர்,
   புஞ்சை புளியம்பட்டி,
   ஈரோடு மாவட்டம் - 638 459.

2. நகராட்சி ஆணையர்
   புஞ்சை புளியம்பட்டி நகராட்சி,
   ஈரோடு மாவட்டம் - 638 459.